**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.118/2025 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.8 |
| பெயர் | திவ்யா - மருத்துவர் | கிராமம் | |
| தந்தை பெயர் | | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Krishnan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 02.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

1 முதல் 3 வரையிலான எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை குடியிருப்பு மருத்துவராக பணி செய்து வருகிறேன். 12.02.2023 தேதியில் மாலை 4.00 மணியளவில் நான் புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது முகவரி தெரியாத கோவிந்தம்மாள் வயது 40 என்ற பெண் 12.02.2023 தேதியில் மாலை 3.10 மணியளவில் மெயின்போஸ்ட் ஆபிஸ் அருகே வேலை செய்த இடத்தில் குழிக்குள் விழுந்ததில் காயம் ஏற்பட்டதாக கூறி தலையில் காயத்துடன் புகழ் என்பவர் மூலம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்ததில் அவருக்கு தலையில் சிதைந்த காயமும், முன்தலையில் ரத்தக்கட்டு காயமும் இருந்தது. அவர் என்னிடம் அழைத்து வரப்படும்போது சுயநினைவு இல்லாமல் இருந்தார். அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் சம்மந்தமாக நான் வழங்கிய விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.3. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். கான்கிரீட் தூண் ஒரு நபரின் தலையில் விழுந்தால்

நான் சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**<u>குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

Sd/– திவ்யா

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.